(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 14.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 செப்டெம்பர் 20 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர**

**கௌரவ எம். எஸ். தௌபீக்**

**கௌரவ குலசிங்கம் திலீபன்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ ஷான் விஜயலால் த சில்வா**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ துமிந்த திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ சாரதீ துஷ்மந்த**

**கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய**

**கௌரவ இசுரு தொடன்கொட**

**கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ எச். நந்தசேன**

**கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த**

**கௌரவ அசங்க நவரத்ன**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2022 செத்தெம்பர் மாதம் 9 ஆம் திகதி "ஒதுக்கீடு (திருத்தம்) எனும் சட்டமூலத்திலும் 2022 செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி "கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தம்), வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) மற்றும் கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தம்) எனும் சட்டமூலங்களிலும் கௌரவ சபாநாயகர் அவர்களால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**II**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 140 இன் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின் போது 2022.09.20 ஆம் திகதி முதல் சேவையாற்றுவதற்காகக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர் குழாத்திற்கு உள்ளடக்குவதற்கு கௌரவ சபாநாயகர் அவர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என பாராளுமன்றத்திற்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ வேலு குமார்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ மதுர விதானகே

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ சமன்பிரிய ஹேரத்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய"

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் எச்சீஎல் டெக்னொலஜீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 2291/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 யூலை 27 ஆம் திகதிய 2290/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2020/21 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட பொஸ்பேட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(11) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பேராதெனிய, ஏதன்டுவாவ, 252/ஏ—2 இல் வதியும் திரு. பிரியந்த ராஜபக்ஷவினது 2022.03.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லஸந்த அலகியவன்ன சமர்ப்பிகத்தார்.

(2) கண்டி, போவல, சுதர்மா மாவத்தை, இல. 15/12-பீ யில் வதியும் திரு. தொன் ஆனந்த முனசிங்கவினது 2022.06.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எஸ்.பீ. திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(3) கம்பஹா, நாரன்வல, கலபொடவத்த, இல. 40 இல் வதியும் திரு. பி.ஜி.எஸ்.கே.ஐ குமாரசிங்கவினது 2022.07.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 ஆகஸ்ட் 09 மற்றும் 12 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. தேசியப் பேரவையை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்த தீர்மானம்,—

(அ) சபாநாயகரைத் தவிசாளராகக் கொண்டு பிரதம அமைச்சர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து ஒன்பதாவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முப்பத்தைந்திற்கும் (35) மேற்படாத பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய "தேசிய பேரவை" என பெயர்குறிக்கப்படும் ஒரு குழு பாராளுமன்றத்தினால் ஸ்தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(ஆ) தேசிய பேரவையனாது,

(i) குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல் தொடர்பாக பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளை தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(ii) பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தர கால பொதுவான அதிகுறைந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய உடன்பாட்டிற்கு வருவதற்கும்; அத்துடன்

(iii) அமைச்சரவை அமைச்சர்கள், தேசிய பேரவை, விசேட குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் இளைஞர் அவதானிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்கும் விசேட கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும்

அதிகாரத் தத்துவம் மற்றும் பொதுவான பொறுப்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய பேரவையானது,

(அ) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்;

(ஆ) அரசாங்க நிதி பற்றிய குழு;

(இ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு;

(ஈ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு;

(உ) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு;

(ஊ) வழிவகைகள் பற்றிய குழு;

(எ) பொருளாதார உறுதிப்படுத்தல் குழு; மற்றும்

(ஏ) அத்துடன் அரசாங்க நிதிகளைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் குழு

ஆகியவற்றிலிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கான தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) அமைச்சரவையானது, அரசியலமைப்பின் உறுப்புரை 43 இன் கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றும்போது பேரவைக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு இயலுமாதல் வேண்டும்.

(உ) இத் தேசிய பேரவையின் கூட்ட நடப்பெண் 10 உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) பேரவையின் முன் அங்கீகாரமின்றி அதன் 3 தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத ஏவரேனுமொரு உறுப்பினர் அப்பேரவையின் உறுப்புரிமையினை இழந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமைதாங்குவாராக” பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.07 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. ஒத்திவைப்பு :** “இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 4.51 மணிக்கு, இன்றையதின சபைத் தீர்மானத்திற்கிணங்க, தலைமைதாங்கும் உறுப்பினரால் பாராளுமன்றம் 2022 செப்டெம்பர் 21 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.